# T20 Current Affairs

## for

# TNPSC

# Aug - 2022

Towards Your Success

**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs

## Table of Contents

தமிழக நிகழ்வுகள் ....3
இந்திய நிகழ்வுகள்....13
பொருளாதாரம்....15
உலக நிகழ்வுகள்....16
அறிவியல் & தொழில்நுட்பம் ....17
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....19
திட்டம் ....20
பாதுகாப்பு....21
கூட்டுப்பயிற்சி....22
விருதுகள் ....22
விளையாட்டு நிகழ்வுகள்....22
புத்தகம் ....23
முக்கிய தினம்....23

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **சென்னை அருகே பரந்தூரில் இரண்டாவது விமான நிலையம்**
  - காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் பகுதியில் சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது என விமான போக்குவரத்து துறை இணையமைச்சர் வி.கே.சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
- **சூப்பர் குட்டி போலீஸ்' திட்டம்**
  - தமிழ்நாடு போக்குவரத்து பாதுகாவலர்கள் அமைப்பு மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இடையே செயல்படும் "சாலை பாதுகாப்பு ரோந்து படை"ஆகிய இரண்டு அமைப்புகள் சார்பாக, குழந்தை பருவம் முதலே சாலை போக்குவரத்து விதிகளை மதித்து நடக்க பயிற்சி அளிக்கும் வகையில் யுகேஜி முதல் ஏழாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களைக் கொண்டு சூப்பர் குட்டி போலீஸ் என்கிற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- **ராம்சர் தளங்களின் பட்டியல் தமிழகத்தில் நான்கு இடங்கள்**
  - சுதந்திரத்தின் 75 வது ஆண்டில் 13,26,677 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட 75 ராம்சர் தளங்களை உருவாக்க ராம்சர் தளங்களின் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த நான்கு இடங்கள் உள்பட மேலும் 11 ஈரநிலங்களை இந்தியா சேர்த்துள்ளது.
  - தமிழ்நாட்டில் நான்கு (4) தளங்கள், ஒடிசாவில் மூன்று (3), ஜம்மு & காஷ்மீரில் இரண்டு (2) மற்றும் மத்தியப் பிரதேசம் மற்றும் மராட்டியத்தில் தலா ஒன்று (1) ஆகியவை அடங்கும்.
  - 1971 ஆம் ஆண்டு ஈரானின் ராம்சர் நகரில் கையெழுத்திடப்பட்ட ராம்சர் உடன்படிக்கை நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியா பிப்ரவரி 1, 1982 இல் இதில் கையெழுத்திட்டது.
  - சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம், வடுவூர் பறவைகள் சரணாலயம், காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் ஆகியவை தமிழகத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.
  - இந்தியாவில் அதிகபட்சமாக ராம்சர் தளங்களுடன் (14) தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து உ.பி. யில் 10 ராம்சர் தளங்கள் உள்ளன.
  - பிப்ரவரி 02, 1971 அன்று நிலங்களின் அழிவைத் தடுப்பதற்காக ஈரான் நாட்டின் ராம்சர் நகரில் முதல் சர்வதேச மாநாடு நடந்தது. ராம்சர் பிரகடனம் என்று பெயர். ராம்சரில் இந்தியா உள்ளிட்ட 172 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- **மாநில மனித உரிமைகள் ஆணைய வெள்ளி விழா**
  - சென்னை, கலைவாணர் அரங்கில் நடந்த மாநில மனித உரிமை ஆணையத்தின் வெள்ளி விழாவில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஐகோர்ட்டு தலைமை நீதிபதி ,தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர் அருண் மிஸ்ரா, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ரூ.25 கோடியில் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டம்**
  - தமிழகத்தில் அனைத்து விளையாட்டுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும், உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவர்களை உருவாக்க ரூ.25 கோடி செலவில் `ஒலிம்பிக் தங்க வேட்டை' செயல்படுத்தப்படும் ஒலிம்பியாட் நிறைவு விழாவில் முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்தார்.
- **மாணவிகளுக்கு ரூ.1000 உதவித் திட்டம்**
  - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள மாணவிகள் மாதம் ரூ.1000 ஆயிரம் பெறுவதற்கான திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.698 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.
  - தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ்அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணவிகளுக்கு , மாதம் ரூ.1,000/ வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது.
- **ஆதிச்சநல்லூர் அகழாய்வில் தங்கம், வெண்கலம் கண்டெடுப்பு**
  - ஆதிச்சநல்லூர் சி சைட் எனப்படும் அலெக்சாண்டர் ரியாவில் ஏற்கனவே அகழாய்வு செய்யப்பட்ட இடத்தில் 30 செ.மீட்டர் ஆழத்தில் நடந்த அகழாய்வு பணியில் தங்கத்தால் ஆன பட்டயம், வெண்கல வடிகட்டி, 2 கிண்ணம் தாங்கிய பறவை வடிவத்துடன் கூடிய அலங்கார கிண்ணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- **சிவகளை 3ம் கட்ட அகழாய்வு**
  - தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகேயுள்ள சிவகளை பரம்பு பகுதியில் நடைபெற்ற 3- ம் கட்ட அகழாய்வில் முதன்முறையாக தங்கத்தால் ஆன பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
  - இரண்டாம்கட்ட அகழாய்வில் சிவகளையைச் சுற்றியுள்ள ஒன்பது இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன. இதில், 37 முதுமக்கள் தாழிகள், இரும்பு ஆயுதங்கள், நெல்மணிகள், வாள், கத்தி, தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
  - இரண்டு கட்டங்களாக நடைபெற்ற அகழாய்வுப் பணிகளில் கிடத்த முதுமக்கள் தாழியில் இருந்த நெல்மணிகளை வைத்து அதன் காலம் சுமார் 3,200 ஆண்டுகள் பழைமையானது என கண்டறியப்பட்டது.
- **தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் சார்பில் 'நெய்தல் உப்பு' விற்பனை**
  - ஆகஸ்ட் 12, 2022 அன்று உப்பு உற்பத்தி இல்லாத காலங்களில் உப்பள தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரண தொகை வழங்கும் திட்டத்தையும், "நெய்தல் உப்பு" என்ற புதிய வணிக பெயரில் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

நியாயமான விலையில் வெளிச்சந்தையில் விற்பனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

❖ **தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகம்**

- ஆகஸ்ட் 12 ஆம் தேதி "உலக யானைகள் நாளில், தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகத்தியமலை அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் நீலகிரி யானைகள் காப்பகம், நிலம்பூர் யானைகள் காப்பகம்,ஸ்ரீவில்லிபுத்தூர் யானைகள் காப்பகம், ஆனைமலை யானைகள் காப்பகம் என 4 யானைகள் காப்பகங்கள் உள்ளன.
- 2017ஆம் ஆண்டு நடந்த யானைகள் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் சுமார் 2,700 யானைகள் உள்ளன.

❖ **முதல்முறையாக பேருந்து சேவை பெற்ற மலைக்கிராமம்**

- நாட்டின் 75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் தருவாயில், தருமபுரி மாவட்டத்தில் மினி ஊட்டி என்று அழைக்கப்படும் வத்தமலை கிராமத்துக்கு முதன்முறையாக அரசுப் பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது.

❖ **சர்வதேச பட்டம் விடும் திருவிழா**

- தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை சார்பில் மாமல்லபுரத்தில் 13-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை 'சர்வதேச பட்டம் விடும் திருவிழா' நடைபெற்றது.

❖ **காந்தியடிகளின் திருவுருவச் சிலை திறப்பு**

- ஆகஸ்ட் 15, 2022 அன்று காந்தியடிகள் தமிழ்நாட்டில் மேலாடை துறந்து எளியவர்களைப் போல அரை ஆடை உடுத்திய நூற்றாண்டு நினைவாகவும், 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை சிறப்பிக்கின்ற வகையிலும் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, எழும்பூர், அருங்காட்சியக வளாகம். தேசிய கலைக்கூடம் எதிரில் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

❖ **சுதந்திர போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் உயர்வு**

- தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் இந்திய விடுதலை போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.18 ஆயிரத்திலிருந்து, ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் குடும்ப ஓய்வூதியம், ரூ.9 ஆயிரத்திலிருந்து, ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று சுதந்திர தின விழா உரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

❖ **உலகளாவிய பொது சுகாதார மாநாடு**

- 2022, டிசம்பர் 6-ஆம் தேதி  முதல் 8 ஆம் தேதி வரை உலகளாவிய பொது சுகாதார மாநாடு சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடத்தப்படவுள்ளது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள் : பொது சுகாதாரத்தை சிறப்புகள்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பிரதமருக்கு, முதல்வர் வழங்கிய 'Home of Chess' என்றபுத்தகம்**
  - ஒருநாள் பயணமாக டெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மற்றும் துணை குடியரசுத் தலைவர் ஜெகதீப் தங்கர் ஆகியோரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.
  - அதன் பின்னர், 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடக்க விழாவில் பிரதமர் மோடி கலந்து கொண்டு சிறப்பித்ததற்காக நன்றி தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்த 'Home of Chess' என்ற புத்தகத்தை வழங்கினார்.
- **ஒண்டிவீரன் 251-ஆவது நினைவு நாள்**
  - ஆகஸ்ட் 20, 2002 அன்று பூலித்தேவனின் போர்ப் படைத் தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் 251-வது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை பாளையங்கோட்டை அருகே உள்ள அவரது மணி மண்டபத்தில் அரசு சார்பாக சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.
  - ஒண்டிவீரன் நினைவு அஞ்சல் தலையை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட அதனை தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் பெற்றுக் கொண்டார்.
- **காலணி மற்றும் தோல் துறை மாநாடு**
  - சென்னை நுங்கபப்பாக்கத்தில் காலணி மற்றும் தோல் துறை மாநாடு நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட முதலமைச்சர் முக ஸ்டாலின் 2022-க்கான காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கையை வெளியிட்டார்.
  - தமிழ்நாடு அரசின் காலணி மற்றும் தோல் தொழில் மேம்பாட்டுக் கொள்கை 2025 ஏப்ரல் 1, 2022-ஆம் ஆண்டு முதல் முன்தேதியிட்டு அமலுக்கு வருவதாகவும், 2025 மார்ச் 31 வரை நடைமுறையில் இருக்கும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
  - அதைத்தொடர்ந்து, முதலமைச்சர் முன்னிலையில் 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இந்த 5 நிறுவனங்கள் மொத்தம் ரூ.2,250 கோடி முதலீடு ஒப்பந்தம், புதிய கொள்கை மூலம் 37,450 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.
  - அதன்படி, ராணிப்பேட்டை பனப்பாக்கத்தில் மெகா காலணி தயாரிப்பு பூங்கா அமைக்கப்படுகிறது. காலணி, தோல் பொருட்கள் பிரிவில் அடுத்த 4 ஆண்டுகளில் ரூ.20 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதுபோன்று காலனி தயாரிப்பில் 4 ஆண்டுகளில் 2 லட்சம் வேலை உருவாகும்.
  - நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் ஸ்டாலின், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்களுக்கு உலக அளவில் மிகப்பெரும் வரவேற்பு உள்ளது. ரூ 20,000 கோடி முதலீட்டை ஈர்க்கும் வகையில் கொள்கை வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **திருப்பூர் மண்டல மாநாடு - ரூ.167.58 கோடி நிதியுதவி**
  - "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" திருப்பூர் மண்டல மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 167.58 கோடி ரூபாய் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொழில்முனைவோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.
  - தமிழ்நாடு அரசு, 2022-23ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கயிறு வணிக வளர்ச்சிக்கென 5 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 'தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்' அமைக்கப்படும் என்றுஅறிவித்தது.
  - தமிழக அரசின் MSME வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பணியகத்தின் {MSME Trade and Investment Promotion Bureau) பெயர், 'FaMe TN' (Facilitating MSMEs Tamil Nadu } என மாற்றப்பட்டுள்ளது.
- **தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்**
  - திருப்பூர் மண்டல மாநாட்டில் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் நீண்ட நாள் பிரச்சினையான நிதி வசதியை பிணையமில்லாமல் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு கடன் உத்தரவாத திட்டம் என்ற புதிய திட்டத்தை முதல்-அமைச்சர் தொடங்கி வைத்தார்.
  - இந்த திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சம் வரையுள்ள கடன்களுக்கு 90 சதவீதம் உத்தரவாதமும், ரூ.40 லட்சத்துக்கு மேல் ரூ.2 கோடி வரை உள்ள கடன்களுக்கு 80 சதவீத உத்தரவாதமும் மத்திய அரசின் குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்துடன் இணைந்து தமிழக அரசு அளிக்கிறது.
  - இந்த திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் முதல் மாநிலமாக தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ.1 கோடியே 19 லட்சத்துக்கான கடன் தொகையை திருப்பூர் மண்டலத்தை சேர்ந்த 5 பேருக்கு முதல்-அமைச்சர் வழங்கினார்.
- **மைனர் டிகிரி திட்டம்: அண்ணா பல்கலைக்கழகத்தில் அறிமுகம்**
  - பொறியியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையில், பாடத்திட்டங்களை அண்ணா பல்கலைக் கழகம் முழுமையாக மாற்றி வடிவமைத்துள்ளது. அதில், மைனர் டிகிரி திட்டமும் (இரண்டு டிகிரி) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
  - புதிதாக மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி, பின்டெக் மற்றும் பிளாக் செயின், பொது நிர்வாகம், தொழில்முனைவோர், டேட்டா அனலிஸ்ட், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகிய 5 பாடங்களையும் படித்து தேர்ச்சி அடையும் மாணவர்களுக்கு கூடுதலாக மைனர் டிகிரி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - இந்த கூடுதல் டிகிரியை மூன்றாவது ஆண்டு முதல் மாணவர்கள் படிக்கலாம் என்று அண்ணா பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது மேலும், தமிழர் மரபு, தமிழரும் தொழில்நுட்பமும் ஆகிய பாடங்கள் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டாயம் இந்தப் பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நடைமுறையை அண்ணா பல்கலைக் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

❖ **திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் 139வது பிறந்தநாள் விழா**

- ஆகஸ்ட் 26, 2022 அன்று திரு.வி.க (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்) அவர்களின் 139-வது பிறந்தநாள் விழா தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் கொண்டாடப்பட்டது.

❖ **தமிழக ஆசிரியருக்கு தேசிய நல்லாசிரியர் விருது**

- தமிழகத்தைச் சேர்ந்த ஒரே ஆசிரியர் ராமநாதபுரம் மாவட்டம் கீழாம்பல் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பணி புரியும் ராமச்சந்திரன் என்பவருக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் இவர் ஒருவருக்கு மட்டுமே தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ **கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது**

- சென்னை பெரும்பாக்கதில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில், கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கும் விழா முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.
- 2020-ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை முனைவர் ராசேந்திரன் பெற்றுக் கொண்டார். 2021-ஆம் ஆண்டுக்கான விருதை முனைவர் நெடுஞ்செழியனும், 2022-ஆம் ஆண்டுக்கான விருதை ழான் லூய்க் செவ்வியாரும் பெற்றுக்கொண்டனர்.

❖ **65- வது காமன்வெல்த் மாநாடு: சபாநாயகர் அப்பாவு பங்கேற்பு**

- கனடாவில் உள்ள ஹாலிஃபாக்ஸ் நகரத்தில் சபாநாயகர்களுக்கான 65-வது காமன்வெல்த் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் சபாநாயகர்கள் பங்கு பெற்றனர்.
- இந்தியாவில் இருந்து லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா மற்றும் தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

❖ **தமிழ்நாடு மைய மண்டலங்கள் தொடக்கம்**

- சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் காப்பகங்கள் சந்திப்பு நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- தமிழ்நாடு மண்டல மையங்களை (அடுக்கு-II மற்றும் அடுக்கு-III) மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் தொடங்கி வைத்தார்.

❖ **அரசு இ-சந்தை மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கொள்முதல் உச்சி மாநாடு**

- ஆகஸ்ட் 26, அன்று அரசு இ-சந்தை மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கொள்முதல் உச்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் (சிஐஐ) தென்மண்டல பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் இருந்து 4,06,961 விற்பனையாளர்கள் அரசு இ-சந்தையில் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- அரசு இ-சந்தை தொடங்கப்பட்ட 09.08.2016-க்குப் பின் இந்த இணையப்பக்கத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் நிறுவனங்கள் ரூ.1090 கோடி மதிப்புள்ள பொருட்களை கொள்முதல் செய்துள்ளனர்.
- அதே போல் தமிழ்நாட்டைச் சேர்ந்த விற்பனையாளர்கள் அரசு இ-சந்தை மூலம் ரூ.7185 கோடி மதிப்புள்ள பொருட்களுக்கான ஆர்டர்களை பெற்றுள்ளனர். இதில் தமிழ்நாட்டில் உள்ள எம்எஸ்எம்இ-க்களின் பங்கு ரூ.3493 கோடி மதிப்புள்ளன.

❖ **தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு 2022**

- ஆகஸ்ட் 27 அன்று, தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு 2022-ன் போது மத்திய சுகாதார அமைச்சகம் PPIUCD இல் சிறந்த செயல்திறனுக்கான விருதை மாநிலத்திற்கு வழங்கியது.
- பெண்களுக்கான தற்காலிக கருத்தடை முறையான மகப்பேற்றுக்கு பிறகான கருப்பையக கருத்தடை சாதனத்தை (PPIUCD) அதிக எண்ணிக்கையில் பொருத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

❖ **சென்னையில் சர்வதேச சுகாதார தரவு மாநாடு**

- சங்கர நேத்ராலயா மற்றும் சர்வதேச ஹெல்த் கேர் டேட்டா அனலெட்டிக்கல் சங்கம் ஆகியவை சார்பில் சென்னையில் சர்வதேச சுகாதார தரவு ஆய்வு மாநாடு ('டேட்டா கான் – 2022') என்ற பெயரில் நடைபெற்றது.
- நடைபெற்ற அந்த மாநாட்டில் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் நேரடியாகவும், ஆன்லைன் வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

❖ **"நான் முதல்வன்" திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டம்:**

- ஆகஸ்ட் 29, 2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை தொடங்கி வைத்து, "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் இணைய தளத்தையும் தொடங்கி வைத்தார்.
- மார்ச் 1, 2022 அன்று, தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய 'நான் முதல்வன்' என்கிற புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் சிறப்பம்சமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு, அதனை மேலும் ஊக்குவித்து, அடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம்,



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

எப்படிப் படிக்கலாம் என்று வழிகாட்டுவதுடன், தமிழில் தனித் திறன் பெறவும், சிறப்புப் பயிற்சியுடன் ஆங்கிலத்தில் எழுதவும், சரளமாகப் பேசவும், நேர்முகத் தேர்வுக்கு தயாராவதற்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.

- அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் இணையதளமானது, தமிழக இளைஞர்கள் வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கேற்ப தனித்திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் இலவச திறன் பயிற்சிகள், குறைவான கட்டணத்துடன் கூடிய திறன் பயிற்சிகள், பாடத்திட்டத்துடன் கூடிய திறன் பயிற்சிகள் மற்றும் பாடத்திட்டத்துடன் இணைக்கப்படவுள்ள திறனெய்தும் தொழில்நுட்ப பாடங்கள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள், ஆங்கிலம், ஜப்பானிய, ஜெர்மன் மொழித்திறன் பயிற்சிகள், ஆளுமைத்திறன் பயிற்சிகள், உயர் கல்விக்கான நுழைவுத்தேர்வு பயிற்சிகள் என அனைத்தும் "நான் முதல்வன்" இணையதளத்தின் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- இதன்மூலம் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி இளைஞர்கள் நவீன தொழில் நுட்பங்களில் விருப்பத்திற்கேற்ற வேலைவாய்ப்பினை பெறும் வகையிலான குறுகிய கால பயிற்சிகளை தெரிவு செய்து உலகத்தரத்திலான பயிற்சிகளையும் அதற்குரிய சான்றிதழ்களையும் பெறலாம். இதற்கான இலவச படிப்புகள், குறைவான கட்டணத்துடன் கூடிய படிப்புகள் மற்றும் பாடத்திட்டத்துடன் கூடிய படிப்புகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- சர்வதேச தரத்துடன் இப்படிப்புகளை தமிழக மாணவர்களுக்கு வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், 47 பன்னாட்டு மற்றும் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னதாக, திறன் பயிற்சி தொடர்பாக பல்வேறு நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

- **ஆறுமுகசாமி விசாரணை ஆணையம்**
  - முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை அனைத்துத் தரப்பினரிடமும் முடிவடைந்த நிலையில் 608 பக்கங்கள் கொண்ட அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி சமர்ப்பித்தார்.
  - தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு (மே 25, 2018) தொடர்பான நீதியரசர் அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம் மற்றும் மறைந்த முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் மரணம் தொடர்பான நீதியரசர் அ.ஆறுமுகசாமி விசாரணை அறிக்கை ஆகியவை தமிழ்நாடு அரசு அமைச்சரவையில் ஆகஸ்ட் 29, .2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.
  - தமிழ்நாட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை செயல்படுத்தியது குறித்து விசாரிப்பதற்காக தமிழ்நாடுஅரசால் அமைக்கப்பட்ட ஒருநபர் விசாரணைக் குழுவின் தலைவர்



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

திரு.பி.டபிள்யூ.சி.டேவிதார்,இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் குழுவின் அறிக்கையினை 20.8.2022 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

- **'இந்தியா 75 போர்முனை முதல் ஏர்முனை வரை' நூல் வெளியீடு**
  - நாட்டின் 75-வது சுதந்திரத்தினத்தை குறிக்கும் வகையில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை மற்றும் ராணுவ விஞ்ஞானி வி.டில்லிபாபு எழுதிய 'இந்தியா 75 போர்முனை முதல் ஏர்முனை வரை' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.
- **சென்னையில் 10-ஆவது தேசிய கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சி**
  - சென்னையில் 10-ஆவது தேசிய கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சியை (சாரக்ஸ்) பாதுகாப்பு அமைச்சக செயலாளர் டாக்டர் அஜய்குமார் தொடங்கி வைத்தார்.
  - இந்தியக் கடலோரக் காவல் படையின் கீழ் இயங்கி வரும் தேசிய கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு வாரியத்தின் (NMSARB) சார்பில் சென்னையில் 10-ஆவது தேசிய கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சி(சாரக்ஸ்) முறை இந்தியக் கடலோரப் பகுதிகளில் நடத்தப்பட்டது.
  - "கடல் பயணிகளின் பாதுகாப்பை நோக்கிய திறனைக் கட்டியெழுப்புதல்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இப்பயிற்சி முகாம் நடைபெறுகிறது.
- **ஆதிதிராவிடர், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டம்**
  - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.3 லட்சமாக உயர்த்தி தமிழக அரசு, அரசாணை வெளியிட்டுள்ளது.
  - பழங்குடியின மக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களான தொழில் முனைவோர் திட்டம், நில மேம்பாட்டு திட்டம், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான பொருளாதார திட்டம் ஆகிய திட்டங்களுக்கு 50 சதவீதம் அல்லது திட்ட மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு கணக்கிட்டு அதிகபட்சமாக ரூ.3 லட்சத்து 75 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.
  - இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தில் பயன்பெற வயது வரம்பு 18 முதல் 45 வரை இருக்க வேண்டும். மற்ற திட்டங்களுக்கு வயது வரம்பு 18 முதல் 65 வரை இருக்கலாம்.
  - தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் செயல்படுத்தப்படும், வேளாண் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்பாட்டு திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டம், மருந்தகம், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், ரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு 30 சதவீதம் அல்லது திட்டமதிப்பீட்டிற்கு ஏற்றவாறு கணக்கிட்டு அதிகபட்சமாக ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் மானியம் வழங்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார மேம்பாட்டு திட்டத்திற்கு 50 சதவீதம் அல்லது திட்ட மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு கணக்கிட்டு அதிகபட்சமாக ரூ.2.50 லட்சம் மானியம் வழங்கப்படும்.

- **முதலமைச்சர் சுதந்திர தின விழா விருதுகள் 2022**
  - 76-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொடியேற்றிய முதலமைச்சர் மு.க ஸ்டாலின், விருதுகள் வழங்கினார்.

| **முதலமைச்சர் சுதந்திர தின விழா விருதுகள் 2022** | |
|---|---|
| தகைசால் தமிழர் விருது | ஆர்.நல்லகண்ணு |
| ஏ.பி.ஜெ அப்துல் காலம் விருது | ஆய்வாளர் இன்னாசி முத்து |
| கல்பனா சாவ்லா விருது | திருமதி. ப.எழிலரசி |
| முதல்வரின் முகவரித் துறை விருது | எஸ்.லட்சமி பிரியா |
| முதலமைச்சரின் நல் ஆளுமை விருது | திருமதி. சங்கீதா வீரசந்தானம் |
| காவல் கரங்கள், முதியோர், இயலாதோர் மறுவாழ்வு பரிசு | சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் IPS |
| மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்ததற்கான விருது | மருத்துவர் மரு.ப.ஜெயகணேஷ் மூர்த்தி |
| மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த பங்களிப்பை கொடுத்து வரும் தொண்டு நிறுவனம் விருது | ரினைசன்ஸ் அறக்கட்டளை, புதுக்கோட்டை |
| பெண்களில் சிறந்த சமூக சேவகர் | முனைவர் ஜி.பங்கஜம் |
| **சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருதுகள்** | |
| சிறந்த மாநகராட்சி | சேலம் - மேயர் A.ராமச்சந்திரன் |
| சிறந்த நகராட்சி | ஸ்ரீவில்லிபுத்தூர் (முதல் பரிசு) |
| | குடியாத்தம் (இரண்டாம் பரிசு), |
| | தென்காசி (மூன்றாம் பரிசு) |
| சிறந்த பேரூராட்சி | கருங்குழி (செங்கல்பட்டு மாவட்டம்) |
| முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது | விஜயகுமார், முகமது ஆசிக், வேலூர் ஸ்ரீகாந்த் |
| முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது (பெண்கள் பிரிவு) | எஸ்.சிவரஞ்சனி |

THULIRR IAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP II / II A
ONLINE / OFFLINE MAINS TEST BATCH
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# இந்திய நிகழ்வுகள்

- **கதிசக்தி பல்கலைக்கழக மசோதா அறிமுகம்**
  - தேசிய ரயில் போக்குவரத்து பல்கலைக்கழகத்தின் பெயரை கதிசக்தி பல்கலைக்கழகம் விஸ்வவித்யாலயா என மாற்றம் செய்வதற்காக மத்திய பல்கலைக்கழகங்கள் (திருத்த) மசோதாவை மாநிலங்களவையில் மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தாக்கல் செய்தார்.
- **"காலா அசார்" நோய் ஒழிப்பு இலக்கு 2023**
  - 2023 ஆண்டிற்குள் "காலா-அசார்" (Kala-azar) / கருங் காய்ச்சல் (Visceral leishmaniasis) நோயை, இந்தியாவிலிருந்து மொத்தமாக ஒழிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
  - உலக சுகாதார நிறுவனம் (WHO) காலா-அசார் ஒழிப்புக்கான இலக்கு 2030 ஆகும்.
- **இந்தியாவின் மிகப்பெரிய ஆன்லைன் ஹெர்பேரியம்**
  - இந்திய தாவரவியல் கணக்காய்வு நிறுவனம் (Botanical Survey of India (BSI) உருவாக்கிய 'Indian Virtual Herbarium' எனும் இந்தியாவின் மிகப்பெரிய ஆன்லைன் ஹெர்பேரியத்தை பிரதமர் மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- **தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கை**
  - கடந்த 2021 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற குற்றங்கள், தற்கொலைகள், விபத்துக்கள் உள்ளடவை தொடர்பான விவரங்களை தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டது.
  - அந்த காப்பக அறிவிக்கையின் படி கொலை மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
  - தற்கொலை சம்பவங்கள் மற்றும் விபத்துகளில் பலியானோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- **உலகின் மூன்றாவது பெரும் பணக்கார்**
  - புளூம்பெர்க் பில்லியனர்ஸ் இண்டெக்ஸ் என்பது அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஒவ்வொரு வர்த்தக நாளின் முடிவிலும் புதுப்பித்து வெளியிடப்படுகின்ற உலகப் பெரும் பணக்காரர்களின் தரவரிசை குறியீடு ஆகும்.
  - இந்த பட்டியலில் உலகின் மூன்றாவது பெரும் பணக்காரராக இந்தியாவின் கௌதம் அதானி இடம் பெற்றுள்ளார்.
- **அடல் மேம்பாலம் திறப்பு**
  - அகமதாபாத்தில் சபர்மதி ஆற்றங்கரை அருகே எல்லிஸ் பாலம் மற்றும் சர்தார் பாலம் இடையே 300மீட்டர் நீளத்தில் கட்டப்பட்ட மேம்பாலத்துக்கு முன்னால் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவாக 'அடல் மேம்பாலம்' என பெயரிடப்பட்ட மேம்பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ஒரே நாடு ஒரே உரம்**
  - 'ஒரே நாடு ஒரே உரம்' திட்டத்தின் கீழ், 'பாரத்' என்ற ஒற்றைப் பெயரில் மானிய உரங்கள் அனைத்தும் அக்டோபர் மாதம் முதல் விற்பனை செய்யப்பட உள்ளன.
  - பிரதமரின் உரங்கள் மானியத் திட்டத்தின் கீழ் (பிரதமரின் பாரதிய ஜனுர்வாரக் பரியோஜனா–பிஎம்பிஜேபி) 'ஒரே நாடு ஒரே உரம்' திட்டத்தை அறிவித்து, அவர் மேலும் கூறியதாவது:
  - நாடு முழுவதும் உர உற்பத்தி நிறுவனங்கள், 'பாரத்' என்ற பொது பெயரிலேயே உரத்தை விற்க வேண்டும்.
  - மூட்டைகளில் தங்கள் நிறுவனத்தின் பெயரை ஏதாவது ஒரு இடத்தில் மட்டுமே அச்சிட வேண்டும்.
  - யூரியாவாக இருந்தால், 'பாரத் யூரியா', டி-அம்மோனியம் பாஸ்பேட் என்றால் 'பாரத் டிஏபி' என்று பெரிய எழுத்துகளில் அச்சிட வேண்டும்.
- **Gun Hill (துப்பாக்கி மலை)**
  - இந்தியாவுக்குள் கடந்த 1999ஆம் ஆண்டு கார்கில் போரில் பணியாற்றிய "இந்தியப் படைகளின் வெற்றியை நினைவுகூரும் வகையில், கார்கில் செக்டாரில் உள்ள டிராஸில் உள்ள 5140ஆவது முனைக்கு , "ஆபரேஷன் விஜய்"யில் பங்கேற்ற வீரர்களின் உச்சபட்ச தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில், "துப்பாக்கி மலை" என்று பெயரிடப்பட்டது".
- **தரவு பாதுகாப்பு மசோதா மசோதா - 2021**
  - 2019-ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற நீதியரசர் BN ஸ்ரீகிருஷ்ணா அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட "தரவு பாதுகாப்பு மசோதா மசோதா 2021" (Data Protection Bill, 2021) மக்களவையிலிருந்து திரும்பப் பெறப்பட்டது.
- **இந்தியாவின் முதல் மெய்நிகர் பள்ளி தொடக்கம்**
  - இந்தியாவின் முதல் மெய்நிகர் பள்ளியை தில்லியில், அம்மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவால் தொடங்கி வைத்தார்.பள்ளிக்கு வர இயலாத தொலைதூரங்களில் இருந்து பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு ஏதுவாக இந்த மெய்நிகர் பள்ளி திட்டத்தை தில்லி அரசு அறிமுகம் செய்துள்ளது. நாட்டின் அனைத்து பகுதியில் இருந்தும் மாணவர்கள் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெற்றுக் கொள்ளலாம்.
- **மந்தன் தளம் (Manthan Portal)**
  - 75-ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் வகுத்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு இணங்க இந்தியாவின் வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுவதற்காக தொழில்துறை, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழலியலுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்காக மந்தன் (Manthan) தளத்தை இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் அறிமுகப்படுத்தியுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **முதல்முறையாக நேரடி ஒளிபரப்பான உச்ச நீதிமன்ற வழக்கு விசாரணை**
  - உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி ரமணா (48-வது தலைமை நீதிபதி) ஓய்வுபெற்றதையொட்டி, 72 ஆண்டுகால உச்சநீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக வழக்கு விசாரணை ஆன்லைன் மூலம் இன்று நேரலை செய்யப்பட்டது.
- **தாதாபாய் நவ்ரோஜிக்கு புதிய கவுரவம் புளூ பிளேக்**
  - இந்தியாவின் முதுபெரும் கிழவர் என்று அழைக்கப்படும் தாதாபாய் நவ்ரோஜி தெற்கு லண்டனில் 8 ஆண்டு காலம் வாழ்ந்த சிவப்பு செங்கல் வீட்டில் இப்போது தாதாபாய் நவ்ரோஜி (1825-1917), இந்திய தேசியவாதி மற்றும் எம்.பி. இங்கு வாழ்ந்தார்' என நீலப்பலகையில் ('புளூ பிளேக்') பொறிக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டுள்ளது.
- **தக்காளி காய்ச்சல்**
  - தக்காளி காய்ச்சல் முதன் முதலாக கேரளத்தின் கொல்லம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது.
  - தக்காளி காய்ச்சல் காக்சாக்கி A16 என்ற வைரஸின் மூலம் ஏற்படுகிறது. இது எண்டரோ வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது.

## பொருளாதாரம்

- **நாட்டில் முதல் முறையாக நடைபெற்ற 5ஜி அலைக்கற்றை ஏலம்**
  - நாட்டில் முதல் முறையாக நடைபெற்ற 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் சுமார் ரூ.1,50,173 கோடிக்கு ஏலம் கேட்கப்பட்டுள்ளது. இதில் 24,740 மெகாஹெர்ட்ஸை ரூ.88 ஆயிரம் கோடிக்கு ஏலமெடுத்து ரிலையன்ஸ் ஜியோ முதலிடம் பிடித்துள்ளது. சுனில் பார்தி மிட்டல் தலைமையிலான ஏர்டெல் 19,867 மெகாஹெர்ட்ஸை ரூ.43,084 கோடிக்கும் வோடஃபோன் ஐடியா ரூ.18,784 கோடிக்கும், அதானி டேட்டா நெட்வொர்க்ஸ் 400 மெகாஹெர்ட்ஸை ரூ.212 கோடிக்கும் ஏலம் எடுத்துள்ளன.
- **உலக அளவில் அதிகமாக டிஜிட்டல் பணம் பயன்படுத்துவதில் இந்தியா 7-வது இடம்**
  - 2021 ஆம் ஆண்டில், ஐ.நா. வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு, உலக அளவில் அதிகமாக டிஜிட்டல் பணம் பயன்படுத்துபவர்களை கொண்ட நாடுகளை தரவரிசைப்படுத்தி உள்ளது. முதல் 20 இடங்களை பிடித்த நாடுகளை பட்டியலிட்டுள்ளது.
  - அதில், முதலிடத்தில் உக்ரைன் உள்ளது. அங்கு 12.7 சதவீதம் பேரிடம் டிஜிட்டல் பணம் உள்ளது. ரஷியா, வெனிசுலா, சிங்கப்பூர், கென்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.
  - இந்தியாவில் அதன் மொத்த மக்கள்தொகையில் 7.3 சதவீதம் பேரிடம் கடந்த ஆண்டு டிஜிட்டல் பணம் இருந்தது. இந்த பட்டியலில் இந்தியா 7-வது இடத்தில் இருக்கிறது.
- **இந்தியா@ 100 போட்டித்தன்மை பெருந்திட்டம்**
  - இந்தியா@ 100 போட்டித்தன்மை பெருந்திட்டத்தை (Competitiveness Roadmap for India@100) பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுவின் (Economic Advisory Council to the Prime Minister-



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

EAC-PM) தலைவர் டாக்டர் பிபேக் தெப்ராய் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து வெளியிட்டனர்.

- நாட்டின் 100-வது ஆண்டை நோக்கிய பயணத்தில் மிகப் பெரிய ஆற்றலையும், விருப்பங்களையும் நனவாக்க தேவைப்படும் நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கான வழித்தடமாக இந்தியா @100 பெருந்திட்டம் இருக்கும். 2047-ஆம் ஆண்டுக்குள் அதிக வருவாய் ஈட்டக் கூடிய நாடாக இந்தியாவை திகழச் செய்வதற்கான வழிவகைகள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **"டார்னியர் கடலோர கண்காணிப்பு விமானம்"**
  - இந்தியா – இலங்கை இடையிலான ராணுவ நல்லுறவு ஒப்பந்தத்தின்படி, அந்நாட்டுக்கு தேவையான ராணுவ உபகரணங்கள், பயிற்சிகளை இந்தியா அளித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கடற்பகுதிகளை கண்காணிக்கும், 'டோர்னியர் 228' என்ற கண்காணிப்பு விமானத்தை இலங்கை கடற்படையிடம், இந்தியா இந்தியா ஒப்படைத்தது
- **பராகுவேவில் இந்தியாவின் புதிய தூதரகம்**
  - பராகுவே தலைநகர் அசுன்சியானில் இந்தியாவின் புதிய தூதரகத்தை மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.
- **சீனாவின் உளவுக் கப்பல் 'யுவான் வாங்-5' இலங்கை வருகை**
  - சீனாவின் உளவுக் கப்பலான 'யுவான் வாங்-5' இலங்கையின் அம்பன்தோட்டா துறைமுகத்துக்கு வந்தடைந்தது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, செயற்கைகோள்களை கண்காணிக்கும் அதிநவீன வசதிகளைக் கொண்ட சீனாவின் 'யுவான் வாங்-5' உளவுக் கப்பல் இலங்கையின் அம்பந்தொட்ட துறைமுகத்திற்கு வந்தடைந்தது. இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.
- **முதல்முறையாக அமெரிக்க சரக்குக் கப்பல் சென்னையில் பராமரிப்பு**
  - அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த சார்லஸ் டிரியூ என்ற கடற்படை சரக்குக் கப்பல் பழுது மற்றும் பராமரிப்பு சேவைக்காக, முதல்முறையாக சென்னை அடுத்த காட்டுப்பள்ளிக்கு வந்துள்ளது.
- **உலகின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை ஜெர்மனியில் தொடக்கம்**
  - உலகிலேயே முதல்முறையாக ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் பயணிகள் ரயில் சேவை ஜெர்மனி நாட்டின் லோயர் சாக்சோனியில் தொடங்கப்பட்டது.
- **இலவச உணவை வழங்கும் முதல் அமெரிக்க மாநிலம்**
  - அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாண அரசு, அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. யுனிவர்சல் மீல்ஸ் என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த திட்டம் இலவச காலை மற்றும் மதிய உணவுத் திட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **வியாழன் கிரகத்தின் புதிய படத்தை வெளியிட்ட ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி**
    - ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியில் பதிவான வியாழன் கிரகத்தின் தோற்றத்தை நாசா வெளியிட்டுள்ளது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் மூலம் நாசா வெளியிட்டுள்ள புகைப்படங்களில் ஏராளமான நட்சத்திர திரள்கள் காணப்படுகின்றன.
    - புகைப்படத்தின் முன்பகுதியில் மாபெரும் நட்சத்திர திரள்களும், பின்பகுதியில் தொலைதூரத்தில் உள்ள நட்சத்திர திரள்களும் பிரகாசமாக ஒளிர்கின்றன. இந்தப் புகைப்படத்தின் ஒரு பகுதியானது, பெருவெடிப்பு நிகழ்ந்த ஆரம்ப காலத்தைக் காட்டுவதாகும் என நாசா தெரிவித்துள்ளது.
    - விண்வெளி ஆய்வுக்காக 10 பில்லியன் டாலர் சுமார் ரூ.79,000 கோடி) செலவில் உருவாக்கப்பட்ட ஜேம்ஸ் வெப்(james webb space telescope) எனப்படும் உலகிலேயே மிகப்பெரிய, சக்திவாய்ந்த விண்வெளி தொலைநோக்கியை நாசா கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் விண்வெளியில் செலுத்தியது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **நாட்டின் முதல் உப்பு நீர் எல்.இ.டி. விளக்கு "ரோஷினி" (Roshini LED lamps)**
    - கடல் நீரை எலக்ட்ரோலைட்டாகப் பயன்படுத்தும், "ரோஷினி" (Roshini LED lamps) எனப் பெயரிடப்பட்ட இந்தியாவின் முதல் உப்பு நீர் எல்.இ.டி. விளக்கை (Saltwater LED Lamp) சென்னையில் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அறிமுகப்படுத்தினார்.
- **SSLV D1 மிஷன் (இஓஎஸ்-02 செயற்கைக்கோள்) - தோல்வி**
    - ஆகஸ்ட் 7, 2022 அன்று குறைந்த எடை கொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக இஸ்ரோ பிரத்யேகமான உருவாக்கிய எஸ்எஸ்எல்வி (SSLV-D1) ராக்கெட், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இந்த ராக்கெட் 144 கிலோ எடை கொண்ட புவி கண்காணிப்புக்கான EOS-02 செயற்கைக்கோளையும், அரசுப் பள்ளி மாணவிகள் சேர்ந்து உருவாக்கிய 8 கிலோ எடை கொண்ட ஆசாதிசாட் (AzaadiSAT)என்ற செயற்கைக்கோளையும் சுமந்து சென்றது.
    - ஆனால், ராக்கெட் இரு செயற்கைக்கோள்களையும் 356 கிலோ மீட்டர் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்துவதற்கு பதிலாக, 76 கிலோ மீட்டர் நீள்வட்டப்பாதையில் நிலைநிறுத்தியது. சென்சார் செயலிழப்பால் செயற்கைக்கோள்கள் ராக்கெட்டிலிருந்து முன்கூட்டியே வெளியேறியதால் வட்டப்பாதை மாறியுள்ளது.
- **இந்தியாவின் முதல் அறுவைச் சிகிச்சை ரோபோ - "SSI Mantra"**
    - இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், முதன்முதலில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட "SSI Mantra" எனும் அறுவைச் சிகிச்சை ரோபோ இயங்குதளம் (Surgical Robotic Platform) புது தில்லியில் உள்ள ராஜீவ் காந்தி புற்றுநோய் நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **SPARK : இந்தியாவின் முதலாவது மெய்நிகர் விண்வெளி தொழிநுட்ப அருங்காட்சியகம்**
  - ஸ்பார்க், ('SPARK' - The Space Tech Park') என்ற பெயரில் இந்தியாவின் முதலாவது மெய்நிகர் விண்வெளி தொழிநுட்ப அருங்காட்சியகம் இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் அவர்களால் தொடங்கப்பட்டது.
  - மெய்நிகர் அருங்காட்சியகத்தில் வாகனங்கள், செயற்கைக்கோள்கள், அறிவியல் பணிகள் மற்றும் இந்தியாவின் விண்வெளித் துறைகளின் முன்னோடிகளை ஏவுவது தொடர்பான பல ஆவணங்கள், படங்கள் மற்றும் வீடியோக்கள் உள்ளன. இஸ்ரோ தொடர்பான அனைத்திற்கும் ஒரே இடத்தில் செல்லும் இடமாக இது செயல்படுகிறது.
- **ஈரானின் கய்யாம் செயற்கைக்கோள் (Khayyam satellite)**
  - ஈரானின் “கய்யாம்” என்று அழைக்கப்படும் ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள் ரஷ்யாவின் சோயஸ்-2.1பி என்ற ராக்கொட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. தெற்கு கஜகஸ்தானில் அமைந்துள்ள ரஷ்ய விண்வெளி ஏவுதளங்களின் தாயகமான பைகோனூர் ஏவுதளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- **உத்தரகண்டில் முதல் விண்வெளி கண்காணிப்பு மையம்**
  - விண்வெளியில் உள்ள பொருள்களைக் கண்காணிப்பதற்கான முதல் வர்த்தக மையத்தை திகன்தாரா' என்ற புத்தாக்க (ஸ்டார்ட்-அப்) நிறுவனம் உத்தரகண்டின் கார்வெல் பகுதியில் அமைக்கவுள்ளது.
  - விண்வெளியில் பூமியைச் சுற்றிவரும் சுமார் 10 செ.மீ. அளவுள்ள பொருள்களைக் கூட அந்த மையத்தில் இருந்து கண்காணிக்க முடியும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. நாட்டில் வர்த்தக நோக்கில் அமைக்கப்படவுள்ள முதல் கண்காணிப்பு மையம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.
- **இந்தியாவில் உருவாக்கப்பட்ட புற்றுநோய் தடுப்பூசி- செர்வாவாக்**
  - இந்தியாவில் முதல் முறையாக பெண்களை பாதிக்கும் கர்ப்பப்பைவாய் புற்றுநோயை தடுப்பதற்கான “செர்வாவாக்” தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.
  - இந்தியா திட்டத்தில் பங்கேற்றுள்ள சீரம் இந்தியா நிறுவனத்தின் ஆதரவுடன் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மூலம் உயிரி தொழில்நுட்பத்துறையும் உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆராய்ச்சி உதவி கவுன்சிலும் இணைந்ததன் விளைவாக செர்வாவாக் தடுப்பூசி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.
  - உலகளவில் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் இந்தியாவில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதில், இரண்டாவது இடத்தில் உள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **இந்தியாவின் 14-வது குடியரசு துணைத் தலைவர் - ஜெகதீப் தங்கர்**
  - இந்திய திருநாட்டின் 14வது குடியரசு துணைத் தலைவராக ஜெகதீப் தங்கர் பதவியேற்றார்.
- **அபிஜித் சென்**
  - பிரபல பொருளாதார நிபுணரும், திட்டக்குழு முன்னாள் உறுப்பினருமான அபிஜித் காலமானார்.
  - மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது 2004 முதல் 2014 வரை திட்டக்குழு உறுப்பினராக அபிஜித் சென் பதவி வகித்தார்.
  - 2019-ல் அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது.
- **உச்சநீதிமன்ற 49-வது தலைமை நீதிபதி பதவியேற்பு**
  - நாட்டின் 49-வது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக யு.யு.லலித் பதவியேற்றுள்ளார். இவருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
  - 48-வது தலைமை நீதிபதி என்.வி.ரமணா
  - வழக்குரைஞராக இருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாகவும், பின்னர், தலைமை நீதிபதியாகவும் ஆகும் இரண்டாவது நபர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.
  - வழக்குரைஞராக இருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாகவும், அதன் பிறகு நாட்டின் 13-வது தலைமை நீதிபதியாக ஆன முதல் நபர் நீதிபதி எஸ்.எம்.சிக்ரி.
- **சரோஜ் நாராயணசுவாமி**
  - அகில இந்திய வானொலியின் முதல் பெண் செய்தி வாசிப்பாளரான சரோஜ் நாராயணசுவாமி காலமானார்.
  - 2008ஆம் ஆண்டில் அவருக்கு தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது வழங்கப்பட்டது.
- **CSIR-ன் முதல் பெண் தலைமை இயக்குநர் என். கலைச்செல்வி**
  - இந்தியாவின் உயர்அறிவியல் தொழில் ஆராய்ச்சி ஆய்வு நிறுவனமான (Council of Scientific & Industrial Research) -ன் முதல் பெண் தலைமை இயக்குநராக தமிழ்நாட்டைச் சேர்ந்த ந.கலைச்செல்வி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் - சுரேஷ் படேல்**
  - மத்திய ஊழல் கண்காணிப்புத்துறை ஆணையராக திரு சுரேஷ் என் பட்டேலுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
- உலக வங்கியின் இந்திய இயக்குநராக அகஸ்டே டானோ கோமே (Auguste Tano Kouame) நியமிக்கப்பட்டுள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## திட்டம்

- **உலகின் மிக உயரமான செனாப் ரயில்வே பாலம் திறப்பு**
  - காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றின் குறுக்கே உலகிலேயே மிக உயரமான ரெயில்வே பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலம் பாரீஸ் நகரில் உள்ள உலகப்புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தை விட 35 அடி அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- **நமஸ்தே திட்டம்**
  - சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த்தொட்டிகளை சுத்தம் செய்வதற்காக "நமஸ்தே திட்டம்" (NAMASTE (National Action Plan for Mechanized Sanitation Ecosystem) scheme) என்ற திட்டத்தை அரசு வகுத்துள்ளது.
  - இந்தியாவில் துப்புரவு பணியின்போது இறப்புகளை முற்றிலும் ஒழிப்பது, துப்புரவு பணியாளர்கள் மனிதக்கழிவுகளை கையாள்வதை ஒழித்தல் மற்றும் திறன்மிகு பணியாளர்களால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் நோக்கமாகக் கொண்டது.
  - இந்த திட்டமானது **குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை**, **மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்** மற்றும் **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம்** ஆகியவற்றின் ஒத்துழைப்பின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

THULIRR
IAS ACADEMY
துண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP I / II / IIA / IV & VAO
ONLINE / OFFLINE CLASSES
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905

- **அடல்பென்சன் யோஜனா திட்டத்தில் புதிய விதிமுறை மத்திய அரசு**
    - அமைப்புசாரா ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவதற்காக அடல் பென்சன் யோஜனா (Atal Pension Yojana) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில், அடல் பென்சன் யோஜனா திட்டத்தின் விதிமுறைகளை மத்திய அரசு திருத்தியுள்ளது.
    - புதிய விதிமுறைப்படி, வருமான வரி செலுத்தும் நபர்களால் அடல் பென்சன் யோஜனா திட்டத்தில் இணைய முடியாது. அக்டோபர் 1-ஆம் தேதி முதல் அடல் பென்சன் யோஜனாவில் வருமான வரி செலுத்தும் நபர்கள் இணைய முடியாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- **உடான் திட்டம் ஐந்து ஆண்டு நிறைவு**
    - விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டம் (Regional Connectivity Scheme UDAN (Ude Desh ka Aam Nagrik) வெற்றிகரமாக 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
    - சாதாரண மக்களும் விமானப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இத்திட்டம் அக்டோபர் 21, 2016 அன்று தொடங்கப்பட்டது.
- **இந்தியாவின் முதல் ஆன்லைன் டாக்ஸி சேவை (கேரளா சவாரி)**
    - கேரளா மாநில அரசுக்கு சொந்தமான நாட்டின் முதல் ஆன்லைன் டாக்சி சேவையான 'கேரள சவாரி'யை திருவனந்தபுரத்தில் தொடங்கியுள்ளது.
- **இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் செல் பேருந்து**
    - மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் கேபிஐடி-சிஎஸ்ஐஆர் (Council of Scientific and Industrial Research (CSIR) & KPIT Limited) இணைந்து உருவாக்கிய முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் எரிபொருள் பேருந்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்து வைத்தார்.
    - ஹைட்ரஜன் மற்றும் காற்றில் உள்ள ஆக்ஸிஜன் அணுக்களை இணைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இரண்டு கேஸ்களும் இணைந்து electrochemical cell உருவாக்கி (வழக்கமான பேட்டரி செல் போன்றது) மின்சாரம், நீர் மற்றும் சிறிய அளவு வெப்பத்தை உருவாக்குகின்றன. மின்சார மோட்டார்களால் வாகனம் இயக்கப்படுகிறது.
- **சமுத்ரயான் திட்டம்**
    - ஆழ் கடலுக்குள் இருக்கும் இதுவரை வெளிஉலகுக்குத் தெரியாத மர்மங்களை வெளிக்கொணர மனிதர்களுடன் கடலுக்கு அடியில் 6000 மீட்டர் ஆழத்துக்குச் சென்று ஆய்வு நடத்தும் ஆழ்கடல் ஆய்வுக்கலமான சமுத்ரயான் திட்டத்தை முதல் முறையாக இந்தியா மேற்கொள்ளவிருக்கிறது.

## பாதுகாப்பு

- **புதுதில்லியில் 12-வது பாதுகாப்பு கண்காட்சி 2022**
    - 12-வது பாதுகாப்பு கண்காட்சி, குஜராத்தின் காந்தி நகரில் 2022 அக்டோபர் 18 முதல், 22 வரை நடைபெறவுள்ளது. இந்த கண்காட்சி முதல் முறையாக இந்திய நிறுவனங்களுக்காக மட்டுமே நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# கூட்டுப்பயிற்சி

❖ **சாரெக்ஸ் - 2022**

➢ தேசிய கடலோர தேடுதல் மற்றும் பாதுகாத்தல் பயிற்சி-2022 (National Maritime Search and Rescue Exercise-SAREX) இந்தியக் கடலோரக் காவல் படையினால் சென்னையில் நடத்தப்பட்டது.

| பெயர் | நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| கடலோர ஒத்துழைப்பு பயிற்சி | இந்தியா & பிரான்ஸ் | கடற்படை கூட்டுப் பயிற்சி | வட அட்லாண்டிக் கடல் |
| எக்ஸ் வின்பேக்ஸ் (EX VINBAX 2022) | இந்தியா & வியட்நாம் | இராணுவ பயிற்சி | (ஹரியானா) சந்திமந்திர் |
| அல் நாஜா – IV' (AL NAJAH) | இந்தியா & ஓமன் | இராணுவ பயிற்சி | ராஜஸ்தான் |
| எக்ஸ் வஜ்ர பிரகார் (Ex Vajra Prahar) - 2022 | இந்தியா & அமெரிக்கா | இராணுவப் பயிற்சி | ஹிமாச்சல் பிரதேசம் |
| உத்ரா சக்தி (Ex UDARA SHAKTI) | இந்தியா & மலேசியா | விமானப்படை பயிற்சி | மலேசியா (குவான்டன்) |
| பிட்ச் பிளாக் (PITCH BLACK) -2022 | இந்தியா & ஆஸ்திரேலியா | இராணுவப் பயிற்சி | ஆஸ்திரேலியா (டார்வின்) |

# விருதுகள்

❖ **"திபல் ரன்கம் டஸ்டன்' விருது - தலாய் லாமா**

➢ திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு லடாக்கின் உயரிய விருதான "திபல் ரன்கம் டஸ்டன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

❖ **இந்திய உலக அழகி போட்டி-2022-23**

➢ திருமணமான பெண்களுக்கான இந்திய உலக அழகி போட்டி- 2022-23, ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த திருமதி. சர்கம் கவுஷல் வெற்றி பெற்றுள்ளார்.

❖ **உலக பெண் தொழில்முனைவோருக்கான விருது-2022**

➢ உலக பெண் தொழில்முனைவோருக்கான விருது (World Women Entrepreneurs' Award) - 2022 கேரளாவைச் சேர்ந்த சங்கீதா அபயான் (Sangeetha Abhiyan) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ **செவாலியே விருது**

➢ காங்கிரஸ் எம்.பி சசி தரூருக்கு, பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான 'செவாலியே' விருது வழங்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு நிகழ்வுகள்

❖ **உலக தடகள சாம்பியன்ஷிப்**

➢ கொலம்பியாவில் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப்பில் மும்முறை தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வ பிரபு பெற்றுள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **சர்வதேச செஸ் கூட்டமைப்பின் தலைவர் - அர்கடி டிவோர்கோவிச்**
  - சர்வதேச செஸ் கூட்டமைப்பின் (International Chess Federation) தலைவராக ரஷியாவைச் சேர்ந்த அர்கடி டிவோர்கோவிச் டிவோர்கோவிச் (Arkady Dvorkovich) நியமிக்கப்பட்டுள்ளார்.
- **இந்தியாவில் ஐ.சி.சி. பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட்**
  - 2025 ஆம் ஆண்டில் ஐ.சி.சி. பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (Women's ODI World Cup ) இந்தியாவில் நடைபெறவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கவுண்சில் அறிவித்துள்ளது.
- **உலகக் கோப்பைக் கால்பந்து போட்டி (FIFA) - 2022 : ஒடிஷா**
  - 2022, அக்டோபர் 11 முதல் 30 வரை, 17 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கோப்பைக் கால்பந்து போட்டி 2022 ஒடிஷாவின் புவனேஸ்வர் நகரில் நடைபெறவுள்ளது.
- **வாலிபால் சாம்பியன்சிப் போட்டி - 2022**
  - ஈரானின் டெக்ரான் நகரில் நடைபெற்ற 14- வது ஆசிய ஆண்கள் 18 வயதுக்குட்பட்டோருக்கான வாலிபால் சாம்பியன்சிப் போட்டியில் (Asian Men's U18 Volleyball Championship) இந்திய அணி வெண்கலம் வென்றது.
- **உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2022**
  - பல்கேரியாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உள்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அன்டிம் பங்கால் தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் இப்போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை அவர் படைத்தார்.

## புத்தகம்

- **தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் புத்தகம் வெளியீடு**
  - மருத்துவர் விஜய ஹறிணி பாலமுருகன் எழுதிய 'தாய்மையின் தோழி. மற்றும் மருத்துவர் பாலமுருகன் எழுதிய 'ஆரோக்கியத்திற்கான பாதை' என்ற இரு புத்தகங்களை தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் வெளியிட்டார்**.**
- "Journey of a Nation: 75 Years of Indian Economy" என்ற புத்தகத்தின் ஆசிரியர் சஞ்சயா பாரு (Sanjaya Baru).

## முக்கிய தினம்

1. ஆகஸ்ட் 7 - தேசிய கைத்தறி தினம்
2. ஆகஸ்ட் 7 - தேசிய ஈட்டி எறிதல் தினம்
3. ஆகஸ்ட் 10 - உலக சிங்க தினம்
4. ஆகஸ்ட் 12 - சர்வதேச இளைஞர் தினம்
5. ஆகஸ்ட் 12 - உலக சமஸ்கிருத தினம்
6. ஆகஸ்ட் 12 - உலக யானைகள் தினம்
7. ஆகஸ்ட் 13 - உலக உடல் உறுப்புதான தினம்
8. ஆகஸ்ட் 13 - இந்திய சுதந்திர தினம்
9. ஆகஸ்ட் 19 - உலக புகைப்பட தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

10. ஆகஸ்ட் 20 - உலக கொசுக்கள் தினம்
11. ஆகஸ்ட் 20 - நல்லிணக்க தினம்
12. ஆகஸ்ட் 21 - உலக மூத்தக் குடிமக்கள் தினம்
13. ஆகஸ்டு 22 - சென்னை தினம் (2022-ல் 383-வது சென்னை தினம்)
14. ஆகஸ்ட் 23 - அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழித்ததற்கான சர்வதேச நினைவு தினம்
15. ஆகஸ்ட் 26- பெண்களுக்கான சமத்துவ தினம்
16. ஆகஸ்ட் 29 - அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம்
17. ஆகஸ்ட் 29 - தேசிய விளையாட்டு தினம்

THULIRRIAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு
முயற்சி திருவினையாக்கும்
SINCE 2017



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com